# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 35 /2018**

திருமதி. நா. சரோஜாதேவி,
க/பெ கா. நாச்சிமுத்து,
147, பொம்மன்பட்டி ரோடு,
கவுந்தப்பாடி – 638 455,
பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம். . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

1) செயற் பொறியாளர்/நகரியம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு,
ஈரோடு – 638 009.

2) உதவி செயற் பொறியாளர்/சித்தோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
11/27, நடுப்பாளையம் ரோடு,
சித்தோடு – 638 102.

3) உதவி பொறியாளர்/சித்தோடு/மேற்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.29, நல் ரோடு, நடுப்பாளையம் ரோடு,
சித்தோடு – 638 102. . . . . . எதிர்மனுதாரர்கள்

**<u>ஆணை நாள் : 27.9.2018</u>**

1. திருமதி. நா. சரோஜாதேவி, க/பெ கா. நாச்சிமுத்து, பொம்மன்பட்டி ரோடு, கவுந்தப்பாடி – 638 455, பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம். அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண்.35/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரின் கடைக்கு முன்பாக உள்ள டிரான்ஸ்பார்மரை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்குமாறு வேண்டியிருந்தார். அதன்படி டிரான்ஸ்பார்மரை மாற்று இடத்தில் மாற்றியமைக்க மதிப்பீட்டுத்தொகை ரூ.2,02,700/– சித்தோடு மேற்குப்பிரிவு மின்அலுவலகத்தில் செலுத்தப்பட்டது. டிரான்ஸ்பார்மர் கம்பங்கள் இரண்டுடன் உபகரணங்களை அப்புறப்படுத்தாமல் அப்படியே கிரேன் மூலமாக எடுத்து மாற்று இடத்தில் பொருத்தப்பட்டது. கம்பி தடங்கள் மட்டும் கழற்றி பழைய டிரான்ஸ்பார்மர் கம்பத்திலிருந்து புதியதாக பொறுத்தப்பட்ட மின் கம்பத்தில் இணைக்கப்பட்டது. புதியதாக அமைக்கப்பட்ட ஒரு மின் கம்பத்திலிருந்து SS டிரான்ஸ்பார்மருக்கு மின் தடங்கள் புதியதாக பொறுத்தப்பட்டது. பழைய மின் உபகரணங்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அழிக்கப்படவில்லை. மதிப்பீட்டில் புதியதாக கம்பங்களும் உபகரணங்களும் பொறுத்தும் வகையில் கணக்கிடப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், பழைய மின் கம்பங்களும், இதர மின் உபகரணங்களும் உபயோகப்பட்டுள்ளது. ஆகவே, மதிப்பீடுபடி நான் செலுத்திய தொகை அதிகமாக உள்ளதாலும் உண்டான செலவு கழித்து மீதித்தொகையை திருப்பி வழங்குமாறு மின்குறைதீர்ப்பாளர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 30.7.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரான மேற்பார்வை பொறியாளர், ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் தனது 15.9.2018 நாளிட்ட கடிதத்தில் 10.9.2018 அன்று நடைபெற்ற இசைவிணக்கக் கூட்டத்தில் மேல்முறையீட்டாளர் திருமதி. நா. சரோஜாதேவி, க/பெ நாச்சிமுத்து என்பவருக்கு பதிலாக மனுதாரரின் கணவர் திரு. நாச்சிமுத்து (ஒப்புதல் கடிதத்துடன்) மற்றும் உரிய மின் கழகப் பொறியாளர்களும் கலந்து கொண்டதாகவும், அக்கூட்டத்தில் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியான திரு. நாச்சிமுத்து அவர்கள் தனக்கு மின் கழகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட பதிலை ஏற்றுக் கொண்டதாகவும் அதனால் மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக 10.9.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடித நகல் மற்றும் இசைவிணக்க கூட்ட விவரம் மின் மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 10.09.2018 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய (மனு எண்.35/2018) மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ஐயா*

*ஈரோடு மின் பகிர்மான வட்டம் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளர், சென்னை அவர்களின் மேல்முறையீட்டு எண்.35/2018–ன் மீது இசைவிணக்கக் கூட்டம் 10.9.2018 அன்று நடைபெற்றது.*

*அக்கூட்டத்தில் மேற்பார்வை பொறியாளர் அவர்களின் ஆலோசனையின் மீது என்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என பணிவுடன்*

*தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் 9.1.2018ம் தேதிய உத்திரவுபடி அறிவிக்கப்பட்ட தொகை ரூ.52,750/—ஐ (ரூபாய் ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) உடன் வழங்க ஆவண செய்யுமாறு வேண்டுகிறேன். இதனால் ஏற்பட்ட சிரமத்திற்கு மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இப்படிக்கு*
*Sd/xx xxx*
*(நா. சரோஜாதேவி) "*

6. மேல்முறையீட்டாளர், தனது 10.9.2018 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.35/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திருமதி. நா. சரோஜாதேவி,
க/பெ கா. நாச்சிமுத்து,
147, பொம்மன்பட்டி ரோடு,
கவுந்தப்பாடி – 638 455,
பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/நகரியம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, EVN ரோடு,
ஈரோடு – 638 009.

3) உதவி செயற் பொறியாளர்/சித்தோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
11/27, நடுப்பாளையம் ரோடு,
சித்தோடு – 638 102.

4)  உதவி பொறியாளர்/சித்தோடு/மேற்கு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.29, நல் ரோடு, நடுப்பாளையம் ரோடு,
சித்தோடு – 638 102.

5)  தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, E.V.N. ரோடு, ஈரோடு – 638 009.

6)  தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.